# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஏப்ரல் - APRIL
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-

**என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.**

யோபு 19:25



இடம்: குன்னூர்

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியர் உரை | 3 |
| பெண்கள் பகுதி | 7 |
| வாலிபர் பகுதி | 9 |
| ஓராண்டில்... வேதவாசிப்பு | 11 |
| சிறுவர் பகுதி | |



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லி ராஜா,** M.S. (IT&M)., M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்
அட்வகேட் **B. கருப்பசாமி பாண்டியன்** B.A., B.L.
அட்வகேட் **V. சுப்பிரமணியன்** M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**



மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.

**கிருபையுள்ள வார்த்தை**
உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் உண்மையை நோக்கி வழிநடத்தும் வார்த்தை

YouTube **@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா

# என் மீட்பர் உயிரோடிருக்கிறார்
# MY REDEEMER LIVES



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், என்றும் உயிரோடிருக்கின்ற ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய பெயராலே அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, தான் உயிரோடிருப்பதினை, சுமார் 40 நாட்கள், பல விதங்களில், பல நபர்களுக்கு வெளிப் படுத்தினார். உதாரணமாக, மகதலேனா மரியாளுக்கு (யோவான் 20:11-18), தாயாகிய மரியாளுக்கு மற்றும் சில பெண்களுக்கு (லூக்கா 24:1-10), எம்மா ஊர் சென்ற சீடர்களுக்கு (மாற்கு 16:12; லூக்கா 24:13-35), பேதுருவிற்கு (1கொரி 15:5), அப்போஸ்தலர்களுக்கு (யோவான் 20-19-26; 21:1-4; அப். 1:3; 1கொரி 15:7), ஐந்நூறுபேருக்கு அதிகமான சகோதரர்களுக்கு (1கொரி 15:6), யாக்கோபிற்கு (1கொரி 15:7), சவுலாகிய பவுலிற்கு (அப். 9:1-9) மற்றும் அனனியாவிற்கு (அப். 9:10-16) ஆண்டவர் தம்மை வெளிப்படுத்தினார்.

ஆண்டவர் இயேசுவின் பிறப்பு, வாழ்வு, போதனை, மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஒவ்வொன்றுமே மிகவும் முக்கியமானதாக இருக்கின்றது. ஆயினும் கிறிஸ்தவத்தின் நம்பிக்கைக்கு உயிர்கொடுப்பது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே என்று சொன்னால் அது மிகையாகாது. கிறிஸ்தவமே கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எனும் நம்பிக்கையின் மேல் கட்டப்பட்ட நல் வழியாகும். ஆண்டவர் இயேசு உயிரோடிருக்கின்றார் என்பது, அன்றைய நாட்களில், அவரை பின்பற்றின அப்போஸ்தலர்களுக்கும், மக்களுக்கும் உயிர்மீட்சி கொடுக்கின்ற செய்தியாக, வரலாறாக இருந்தது. இன்று நமக்கும் அவ்வாறாகவே, நமது ஆத்துமத்தினை உயிர்பிக்கின்றதாக இருக்கின்றது.

ஆகையால், என்றும் உயிரோடிக்கின்ற, நமக்காக தன் உயிரினை கொடுத்த, நமக்குள் உயிரினை கொடுத்து, நம்மை உயிர்பித்த, நமது ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, காண்பித்த தரிசனங்களில் பேசினவைகளில் சிலவற்றைக் குறித்து தியானம் செய்வோம்.

## 1. ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?

யோவான் 20:15 இயேசு அவளைப் பார்த்து: 'ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், யாரைத் தேடுகிறாய்' என்றார். அவள், அவரைத் தோட்டக்காரனென்று எண்ணி: 'ஐயா, நீர் அவரை எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை எடுத்துக்கொள்ளுவேன்' என்றாள்.

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, மகதலேனா மரியாளிடம் கேட்ட கேள்வி, 'ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?' நாம் தினமும் எதையாவது தேடுவதை வழக்கமாக கொண்டிருக்கின்றோம். அவ்வாறு நாம் தேடுகின்ற காரியங்கள் நன்மையாகவோ, அல்லது தீமையாகவோ இருக்கலாம். நமக்கு அதனை பிடித்திருப்பதினாலே தேடுகின்றோம். ஆயினும். நாம் எதை தேடுகின்றோம்? அதை ஏன் தேடுகின்றோம்? என்பதனைக் குறித்த விழிப்புணர்வு நமக்கு அவசியமானதாகும். நாம் நல்லதை விரும்பி தேடுகின்றோமா? நாம் விரும்புகின்ற ஒன்று தீமையாக இருப்பினும், அதனை நன்மையென்று தேடுகின்றோமா? சற்று நிதானித்து அறிய வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு, தேடுவதினை உற்சாகப்படுத்துகின்றார். ஏன் தேடவேண்டும்? அப்பொழுது தான் கண்டடைவீர்கள் என்றார் (மத்தேயு 7:7,8). எதை தேட வேண்டும்? கர்த்தருடைய அரசையும் (ராஜ்ஜியம்), கர்த்தருடைய நீதியையும் (நாம் வாழ்வதற்காக சட்ட திட்டங்களை) தேட வேண்டும் என்றார் (மத்தேயு 6:33). எப்படி தேட வேண்டும்? 'முதலாவதாக' அதாவது, அதனை முக்கியப்படுத்தி, முதன்மையாக தேட வேண்டும் என்றார் (மத்தேயு 6:33). பூமியில் உள்ளவைகளை அல்ல. மாறாக, கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேட வேண்டும் (கொலோசெயர் 3:1,2). நாம் எதை, ஏன் தேடி ஓடிக்கொண்டிருக்கிறோம்? சற்றே சிந்திப்போம்!

## 2. அவர்களுக்குச் சொல்லு:

யோவான் 20:17 இயேசு அவளை நோக்கி: 'என்னைத் தொடாதே, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை. நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப்போகிறேன்' என்று அவர்களுக்குச் சொல்லு என்றார்.

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, மகதலேனா மரியாளிடம் சொன்ன கட்டளை, அவர் உயிர்ந்தெழுந்த நற்செய்தியை அவர்களுக்கு (அப்போஸ்தலர்களுக்கு) சொல்லு என்றார். லூக்காவின் நற்செய்தி நூலிலே கல்லறைக்கு வந்த சில பெண்கள், ஆண்டவர் உயிர்த்தெழுதலின் செய்தியை அப்போஸ்தலர்களுக்கு சொன்ன வரலாற்றை நாம் வாசிக்கின்றோம் (லூக்கா 24:9,10). ஒருவேளை மகதலேனா மரியாள், ஆண்டவர் உயிர்த்தெழுந்த செய்தியை, தன்னோடு கல்லறைக்கு வந்து, அவரை காணாமல், தூதர்கள் சொன்னதை கேட்டு, பயம் மற்றும் மகிழ்ச்சி கலந்து குழப்பமுற்று சென்றுக் கொண்டிருந்த பெண்களிடம் சொல்லி, அவர்களையும் அழைத்துக்கொண்டு. அப்போஸ்தலர்களுக்கு அறிவித்திருக்க வேண்டும் (மத்தேயு 28:7,8).

இதில் என்ன கொடுமை என்றால், இவர்கள் சொன்னதினை அப்போஸ்தலர்கள் நம்பவில்லை (மாற்கு 16:11; லூக்கா 24:11). ஆண்டவர் இயேசு சொன்னதினையும் மறந்துவிட்டார்கள் (லூக்கா 18:31-33). காரணம், சொல்லிக்கொடுக்கும் போதே புரிந்துப்படிக்காததாக இருக்கலாம் (லூக்கா 18:34). இதில் நமக்கான பாடம் என்னவென்றால், யார் நம்பினாலும், நம்பாவிட்டாலும், நாம் நமது நம்பிக்கையை, நமது ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அறிவித்துக்கொண்டே இருக்க வேண்டும். ஆண்டவரோடு இரத்தமும் சதையுமாக பழகின அப்போஸ்தலருக்கே, அது வீண்பேச்சாக, நம்பிக்கையற்றதாக அந்த சூழலில் இருந்திருக்கிறதென்றால், சாதாராண மனிதர்களை என்ன சொல்வது?. ஆகையால் சாக்குபோக்கு சொல்வதினை விட்டுவிட்டு, தினமும் நமது ஆண்டவர் இயேசுவின் நற்செய்தியை நானிலமெங்கும் பரவசெய்வோம். அதுவே நமக்கான கட்டளையும், கொடுப்பினையுமாகும் (1கொரி 9:16).

'ஒரு நாளைக்கு, ஒரு நிமிடமாவது செலவழித்து, ஒருவருக்காவது, ஒரு கைபிரதியாவது கொடுங்கள்' என நான் எல்லாரையும் ஊக்கப்படுத்துவதுபோல, கர்த்தருடைய நாமத்தினாலே இதை வாசிக்கின்ற உங்கள் அனைவரையும் ஊக்கப்படுத்துகின்றேன் (2தீமோ 2:2). ஏனெனில், நாம் தான் அவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படி தெரிந்துக்கொள்ளபட்ட பரிசுத்த சந்ததியாக

இருக்கின்றோம் (1பேதுரு 2:9). ஆகையால், தினந்தோறும் தவறாமல் அதனை செய்வோம்.

### 3. புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே:

லூக்கா 24:25-27 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: 'தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதயமுள்ளவர்களே, கிறிஸ்து இவ்விதமாகப் பாடுபடவும், தமது மகிமையில் பிரவேசிக்கவும் வேண்டியதில்லையா?' என்று சொல்லி, மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்.

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு, எம்மாவு என்னும் ஊருக்கு சென்றுக் கொண்டிருந்த, இரண்டு சீடர்களுக்கு தரிசனமாகி, அவர்களிடம் சொன்ன கடினமான கடிந்துக்கொள்ளுதல் வார்த்தை இது. நமது நம்பிக்கைக்கு பைபிளே மிகப்பெரிய மற்றும் மிகச்சிறந்த ஆதாரமாக இருக்கின்றது. அவை அனைத்தும் சத்தியம் (யோவான் 17:17). ஆகையால் பைபிளில் சொல்லபட்டவைகளை அப்படியே முழு மனதோடு நம்புவோம். மாறாக, அவை உண்மையா? என ஆதாரம் தேட வேண்டாம். கர்த்தருடைய வார்த்தையில் ஏதோ ஒன்றை சந்தேகிப்பது என்பது, முழு பைபிளையும் சந்தேகிப்பதாகும். ஒருவர் கர்த்தருடைய வார்த்தையை எடுத்து, தன் விருப்பபடி விளக்கம் கொடுத்தால், நாம் விட்டுவிலக வேண்டியது அந்த நபரை தான் (தீதது 3:10). மாறாக, கர்த்தருடைய வார்த்தையை சந்தேகிக்கக் கூடாது. பைபிள் முரண்பாடற்றது, நிறைவானது மற்றும் போதுமானதாகும் (1கொரிந்தியர் 4:6).

கர்த்தருடைய வார்த்தையை கற்றுக்கொள்ள நமக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பினையும் மிகவும் நேர்த்தியாக பயன்படுத்திக்கொள்வோம். திறந்த இருதயத்துடன், ஆசையாக, முழு கவனத்துடன் வாசிப்போம், தியானிப்போம் மற்றும் படிப்போம்! (சங்கீதம் 1:2; 119:131; 86:11). நல்ல நிலத்தில் விழுந்த விதை போல, கர்த்தருடைய வார்த்தை நம் இருதயத்தில் விதைக்கப்பட வேண்டும். அதுவே நம்மை பலன்தருகின்றவர்களாக உருவாக்கும் (மத்தேயு 13:23). ஆகையால், சபைக்கூடுகையில் கலந்துக்கொள்ளும் போது, நமது கைகளில் வேத புத்தகமும், நோட்டு பேனாவும் இருக்கட்டும். தயவு செய்து மொபைலை பயன்படுத்த வேண்டாம். அது பைபிள் படிப்பதற்காக என்றாலும், மொபைல் வேண்டாம். அதனை தவிர்ப்போம்! நமது கைகளில் பைபிளை சுமந்து செல்வோம். மேலும், அதனை மறக்க வேண்டாம்! உடலை கர்த்தருடைய சமூகத்தில் வைத்துவிட்டு, மனதை எங்கோ ரெக்கை கட்டி பறக்க விட வேண்டாம். எச்சரிக்கை! அப்படிப்பட்ட செயல், ஆபத்தானதாகும் (நீதிமொழிகள் 13:13). நீதியின் மீது பசியும் தாகமும் உள்ளவர்கள்


**வாசகர்களின் கவனத்திற்கு**

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,
A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

பேறுபெற்றோர் (பாக்கியவான்கள்) என்று ஆண்டவர் இயேசு கற்பித்தார் (மத்தேயு 5:6) என்பதனை நினைவில் கொள்வோம் மற்றும் செயல்படுவோம்.

### 4. உங்களுக்குச் சமாதானம்:

யோவான் 20:19 வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: 'உங்களுக்குச் சமாதானம்' என்றார்.

ஆண்டவர் இயேசு, உயிர்த்தெழுந்த பின்பு, அப்போஸ்தலர்களுக்கு தரிசனமானபோது, அவர்களிடத்தில் சொன்ன ஆசீர் நிறைந்த வாழ்த்துதல் வார்த்தை இது. மேலும், ஆண்டவர் இயேசு, அப்போஸ்தலர்களையும், சீடர்களையும் இரண்டு இரண்டு பேராக ஊழியம் செய்யும்படியாக அனுப்பியபோது, எந்த வீட்டிற்குள் நுழைந்தாலும், சொல்லும்படியாக சொன்ன வார்த்தையும் இது தான் (லூக்கா 10:5; மத்தேயு 10:12,13).

கர்த்தர் நம்மை சமாதானமாக இருக்கும்படிக்கே அழைத்திருக்கின்றார் (1 கொரிந்தியர் 7:15). ஆகையால், நம்மால் இயன்றமட்டும் எல்லா மனிதர்களிடத்திலும் சமாதானமாக இருப்போம் (ரோமர் 12:18). பழிக்கு பழி வாங்குவதோ, தீமைக்கு தீமை செய்வதோ கூடாததாகும் (ரோமர் 12:19-21) மற்றும் அது பாவமாகும். ஆகையால், யாவரோடும் சமாதானமாயிருக்க விரும்பும்படியாக பைபிள் நம்மை உந்துகின்றது (எபிரெயர் 12:14).

சமாதானம் முதலாவதாக, ஆவிக்குரிய குடும்பத்தில் (கர்த்தருடைய சபையில்) காணப்பட வேண்டும் (1தெச 5:12,13). பூமிக்குரிய குடும்பத்திலும், சமூகத்திலும் நாம் கர்த்தருடைய வார்த்தையின்படியே சமாதானமாக இருக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் (1கொரி 7:15; ரோமர் 12:18). ஆகையால், சபைக்குள்ளோ, குடும்பத்திற்குள்ளோ அல்லது சமூதாயத்திற்குள்ளோ நாம் குழப்பங்களையும், பிரிவினைகளையும் உண்டாக்குகின்றவர்களாக இருக்கக் கூடாது. சமாதானத்தினை உண்டாக்கு கின்றவர்களாக இருக்க வேண்டும். அதுவே நாம் கர்த்தருடைய பிள்ளை என்பதற்கான அடையாளமும் ஆசீர் நிறைந்த வாழ்வாகும் (மத்தேயு 5:9). நம்மை யாரும் பகைத்தால், கவலைகொள்ள வேண்டாம். நமது வழிகள் கர்த்தருக்கு பிரியமாக இருக்கும் பட்சத்தில், அவர்களை நம்மோடு, கர்த்தரே சமாதானமாக்குவார் (நீதிமொழிகள் 16:7). நமது ஆண்டவர் இயேசு, அவருடைய சமாதானத்தினை நமக்கு தந்திருக்கின்றார். அதனை நாமும் அனுபவிப்போம் மற்றுவர்களுக்கும் பகிர்ந்தளிப்போம் (யோவான் 14:27).

தொடரும் ..... தொடர்ந்து படிப்போம்!

– அன்புடன், ஆசிரியர்




எனக்கு இவரைப் பிடித்திருக்கிறது என
நம் சுய விருப்பத்திற்கு
முக்கியம் கொடுத்து, சுயநலமாக வாக்களியாமல்,
இந்த மண்ணிற்கும், மக்களுக்கும் எது நல்லது?
யார் நன்மை செய்தார்கள்? செய்வார்கள்?
என நினைவுகூர்ந்து, பொதுநல எண்ணத்துடன்
அனைவரும் மறவாமல் வாக்களிப்போம்

# எது முக்கியம்? எது முதன்மை?

அன்பிற்குரியவர்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்!

பரப்பரப்பாக இயங்க வேண்டும் (இயங்கிக் கொண்டிருக்கின்றோம்) என தினந்தோறும் பல அங்கலாய்ப்புகளுடன் வாழ்ந்துக் கொண்டிருக்கும் நாம், அநேக நேரத்தில் எது முக்கியம்? என்பதை மறந்துவிடுகின்றோம், பிரியமானவர்களே! அநேக தருணத்தில் நாம் முதன்மையாக செய்ய வேண்டிய கடமைகளை தவிர்த்து விட்டு, அதற்கு உறுதுணையாக இருக்கும் காரியங்களை பெரிதுபடுத்தி, செய்து வருகின்றோம். அதனால் அநேக கவலைகள், குழப்பங்கள், பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றோம் (1பேதுரு 5:7).

இந்த பிரச்சனைக்கு தீர்வாக வேதாகமம் நமக்கு எவ்வாறு வழிகாட்டுகிறது என்பதை வசனத்தின் துணையோடு தெரிந்து கொள்வோமா?

இயேசு வந்த வீட்டிலே இப்படித்தான் 2 பெண்கள் இருந்தார்கள். அவரைப் பார்த்தவுடன் அவர் யார் என்பதையும், இன்னார் நமது வீட்டுக்கு வந்து இருக்கிறார் என்பதையும் உணர்ந்து, ஒரு பெண் தன் கடமைகளை சரியாக செய்ய வேண்டும் என்று எண்ணி, அவருக்காக பற்பல வேலைகளிலே தன்னை ஈடுபடுத்தி கவலைப்பட்டுக் கொண்டாள்.

வேதாகமம் சொல்வது (மத்தேயு 4:4; 1 பேதுரு 5:7) அவள் தவறாக எதுவும் செய்யவில்லை. ஆனால் அவள் இயேசுவுக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்தாளே தவிர இயேசு தன்னிடம் என்ன எதிர்ப்பார்ப்பார் என்பதை நினைக்க மறந்தாள்.

இயேசு அவளிடம் சொன்னது; சகோதரியே! நீ பற்பல வேலைகளிலே உன்னை வருத்திக் கொள்கிறாய்; ஆனால் தேவையானது ஒன்றே என்றார். (லூக்கா 10:42).

ஆம் பிரியமானவர்களே! அநேக தருணத்தில், நம்முடைய வாழ்விலே நாமும் கூட இப்படித்தான் "பிதாவின் விருப்பம், பிதாவின் சித்தம் (தேவசித்தம்), அவர் நம்மிடம் என்ன எதிர்பார்ப்பார்" என்று தெரிந்தும், அவைகளை விட்டுவிட்டு, நம் விருப்பத்தை செய்து வருகின்றோம்.

வசனத்தின்படி, அவர் பாதம் அமர்ந்து, அவர் வார்த்தையை கேட்டு, அதன்படி நடந்து, அவரோடு நாம் நேரம் செலவு செய்வதே நமக்கு சமாதானத்தை தரும்.

வேதமும் சொல்வது "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், நீதியையும் தேடுங்கள்" (மத்தேயு 6:33).

**"தேவையானது ஒன்றே! மரியாள், நல்ல பங்கை தேர்ந்தெடுத்தாள்"**

வீட்டு வேலை, சேவை, பொறுப்புகள் (நீதி. 3: 9).

(தொடர்ச்சி... ௮ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" பவழமல்லி

பவழமல்லி அல்லது பவளமல்லி அல்லது பாரிஜாதம் என்னும் இம்மரம் தென் - தென்கீழ் ஆசிய நாடுகளில் வளரும். பவளமல்லியின் அறிவியல் பெயர் Nyctanthes arbor-tristis ஆகும். இதன் மலர் தாய்லாந்து நாட்டின் காஞ்சனபுரி மாநிலத்தில் மாநில மலராக சிறப்பிடம் பெறுகின்றது. பவள (பவழ) நிறக் காம்பும் வெண்ணிறமான இதழ்களும் உடைய பூக்களைக் கொண்டது. இதற்குத் தனிச் சிறப்பான நறுமணம் உண்டு. குளிர் மாதங்களில் பின்னிரவில் பூத்து விடியற்காலையில் உதிரத்தொடங்கும். இம்மரம் இருக்கும் இடமே நறுமணம் வீசும். இந்த மலரைச் சேடல் என்றும் குறிப்பிடுவர்.



இலைகள் தளவாடங்களை மெருகேற்றத் தேய்ப்பதற்காகப் பயன்படும். பூவின் காம்பிலிருந்து பெறப்படும் பவளநிறச் சாயம் டுசார் (Tussar / Tussore Silk) பட்டு எனப்படும் பட்டுத்துணிகளுக்கு நிறமேற்றப் பயன்படும். ஆயுர்வேத மருத்துவத்தில் பவளமல்லி விதைகளும் இலைகளும் பூக்களும் வயிற்றுத் தொந்தரவு, மூட்டு/என்பு வலி, காய்ச்சல், தலைவலி என்பவற்றிற்கும் இன்னும் பல விதங்களிலும் மருந்தாகப் பயன்படுகின்றன.

இவை நல்லது. ஆனால் முக்கியமானது அல்ல. தேவன் ஒருவரே நமக்கு முதன்மை (யாத். 20:3). தேவனுடன் உறவு (மாற்கு 12:30), அவருடைய சந்நிதியில் நேரம் செலவிடுவது, அவருடைய வார்த்தைகளை கேட்பது, இவையே முக்கியம்.

வேலை என்பது தற்காலிகமானது. தேவனுடன் உறவு நிரந்தரம் (நீதிமொழிகள் 3:5,6). எல்லாவற்றையும் செய்யலாம், ஆனால் தேவனை முதலில் வைக்க வேண்டும் (கொலோ.1:18).

வேதாகமத்தில் அநேக பெண்கள், தங்கள் வாழ்வில் தேவனுக்கு முதலிடம் கொடுத்து, தேவனை முதன்மையாக தெரிந்துக்கொண்டார்கள். அதினால் அவர்கள் கிறிஸ்தவ வாழ்விலும், சரீர வாழ்விலும் ஆசீர்வாதங்களை பெற்றார்கள். பிறரும் கர்த்தரை அறிந்துகொள்ள காரணமாக இருந்தார்கள். நாமும் இந்த உலகத்தின் வாழ்வின் மத்தியில் நம் பிரதானமான, முதன்மையான காரியமாக, தேவனுக்கு முதலிடம் கொடுக்க அவருடைய வார்த்தையை கேட்க, அதன்படி வாழ தினந்தோறும் எல்லாவிதமான முயற்சிகளை எடுத்து, கிறிஸ்து இயேசுவுக்குள் வெற்றி பெறுவோம்.

"உலகமும் அதன் இச்சையும் ஒழிந்துபோம். தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1 யோவான் 2:17)

கர்த்தரின் கிருபையோடு, அடுத்த இதழில் சந்திப்போம்!

சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | |
|---|---|---|
| 1. A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 2. A. சுபிக்ஷா | - | பெருமாள் வலசு |
| 3. M. ஜோனத்தான் | - | கரூர் |
| 4. A. சாம் குமார் | - | பெருமாள் வலசு |
| 5. S. ஜோசுவா | - | ராணிபேட்டை |
| 6. A. ஆடின் ஃபேபியோ | - | ராணிபேட்டை |
| 7. A. ஆலன் காலேப் | - | ராணிபேட்டை |
| 8. S. ஜூடித் ஆராதனா | - | ராணிபேட்டை |
| 9. D. டேஃப்னி | - | சென்னை |
| 10. D. ஜூனித்தா | - | சென்னை |
| 11. V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 12. M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 13. S. ஜூடா லியோ | - | ரஸ்தா |
| 14. G. ஜெர்லின் | - | ரஸ்தா |
| 15. J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 16. J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program: Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

# நல்ல சமாரியன்
## லூக்கா 10:25-39

பிரியமான வாலிபர்களே! ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ந்து நாம் ஆண்டவர் இயேசு சொன்ன உவமைகளைப் பற்றி படித்து வருகின்றோம். அந்த வரிசையில் இந்த மாதமும் ஒரு உவமையைப் பற்றி படிப்போம்.

வசனப்பகுதி: லூக்கா 10:25-39


**உவமை: நல்ல சமாரியன்**

இயேசுவை சுற்றி ஜனங்கள் இருந்தனர். அப்போது நியாயசாஸ்திரி ஒருவர் அவரிடம் வந்து நித்திய ஜீவனை பெற நான் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். இவர் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தையோடு வரவில்லை. இயேசுவை சோதிப்பதற்காகவே இந்த கேள்வியை கேட்டார். இயேசு அதற்கு ஏற்ற பதிலையும் சொன்னார் (லூக்கா 10:25-27).

மீண்டும் அந்த நியாயசாஸ்திரி இயேசுவை நோக்கி "ஆண்டவரே, எனக்கு பிறன் யார்?" என்றான். அப்பொழுதுதான் இயேசு இந்த நல்ல சமாரியன் உவமையை சொன்னார். இந்த உவமையை சொல்லக் காரணம், அந்த காலத்தில் யூதர், சமாரியர் இடையே இனப்பிரச்சனை அதிகமாகவே இருந்தது. யூதர்கள் தங்களை உயர் குலத்தவராகவும், சமாரியர் தங்களை தாழ்ந்த குலத்தவராகவும் எண்ணினார்கள். யோவான் 4-ல் இயேசு சமாரியப் பெண்ணிடம் தண்ணீர் கேட்டதற்கு, அவள், நீர் யூதனாயிருக்க சமாரியப் பெண்ணாகிய என்னிடம் தண்ணீர் கேட்கலாமா? என்கிறாள்.

இயேசு இந்த பிரிவினையையும், பாகுபாட்டையும் கொஞ்சம்கூட விரும்பவில்லை. ஒரு யூதன் தனக்கு பிறன் இன்னொரு யூதன் என்று எண்ணினர். ஆனால், உண்மையில் இயேசு சொல்கிறார் யூதனாகிய நீர் யாரை வெறுத்து ஒதுக்குகிறீர்களோ? யாரிடம் அன்பு செலுத்த மறுக்கிறீர்களோ? அவர்களே உங்கள் பிறன் என்பதை இந்த உவமையின் மூலம் விளக்க விரும்புகிறார்.

ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குப் போகும் வழியில் கள்ளர் கையில் அகப்பட்டான். கள்ளர்கள் அவனிடம் உள்ள எல்லாவற்றையும்



எடுத்துக் கொண்டு, அவனையும் அடித்து காயப்படுத்தி, குற்றுயிராய் போட்டுவிட்டு சென்றனர்.

அந்த வழியில் வந்த எந்த யூதனும் (லேவியன், ஆசாரியன்) உதவி செய்ய தவறிய நிலையில், சமாரியன் ஒருவன் வந்து, அவனைக் கண்டு, மனதுருகி, அவனுடைய காயங்களில் எண்ணெயும் அவனுக்கு திராட்சை ரசமும் கொடுத்து, தன்னுடைய வாகனத்தில் ஏற்றி, அவனை தன் சொந்த பணத்தை செலவழித்து, 'மேலும் பணம் வேண்டுமென்றாலும் திரும்பி நான் வந்து தருகிறேன் இவனை சுகமாக்கு' என்று சத்திரத்தில் சொல்லிவிட்டு சென்றான்.

இயேசு கற்றுக் கொடுக்கும் பாடம், சுயநலமாக வாழ்கின்ற வாழ்க்கை எந்த விதத்திலும் கடவுளை பிரியப்படுத்த முடியாது. பக்தி, தொழுகை, ஒழுக்கம், கடவுள் சார்ந்த காரியத்தில் வைராக்கியம் மட்டும் போதாது, இதோடு நம்மைப்போல பிறரையும்

(தொடர்ச்சி... 10ம் பக்கம்)

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோவாஸ் ராஜா செய்த தவறு எவை? அதனால் அவரது வாழ்க்கை எப்படியிருந்தது?
2. ஊசாயின் எச்சரிக்கை யாரைக் காப்பாற்றியது? பிரச்சனையிலிருந்து தப்பிக்கொள்ளும் வழி என்ன?
3. சுயம்பாகியும், பானபாத்திரக்காரனும் எதற்காக சிறையில் அடைக்கப்பட்டார்கள்? கடவுள் நம்மை உயர்த்த நாம் என்ன செய்ய வேண்டும்?
4. எலிசா தேர்ந்தெடுக்கப்பட்ட எலியா செய்த அடையாளம் என்ன?
5. எலிசாவைபோல நீங்கள் எதை செய்ய முடிவெடுத்தீர்கள்?

நேசிக்கின்ற, ஏற்றுக்கொள்கின்ற பண்பு இருக்க வேண்டும். இதுவே கடவுளைப் பிரியப்படுத்தும்.

பிரியமான வாலிபர்களே! இன்றைய நிகழ்கால சமுதாயம் கூட இப்படித்தான் சுயநலமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. யாரைப் பற்றியும் கவலையே இல்லாமல், சுயநலமான இன்பம், தேடல், பொருளாதாரத் தேவை, தனக்கு மட்டும் எல்லாம் கிடைத்தால் போதும், குடும்பத்தில் தகப்பன், தாயைப் பற்றி கவலை கிடையாது என்ற நிலையில் தான் உள்ளனர்.

பெற்றோர்களுக்கு பிள்ளைகளைப் பற்றிய கவலை கிடையாது. அவர்கள் தங்களுக்கென ஒரு வாழ்க்கை! இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். பாருங்கள் நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் சுயநலமான மக்களாய் இருக்கின்றோம்.

நம்மை மாற்றிக் கொள்வோம், மற்றவர்களை நேசிக்க கற்றுக் கொள்வோம். கடவுள் பிறரைப் பற்றி கவலைப்பட்டு அன்பு செலுத்தினதினால்தான் நமக்காக இயேசுவையே கொடுத்து, தமது அன்பை (யோவான் 3:16) வெளிப்படுத்தினார். அப்படியே நாமும் நம்மைப்போல பிறரை நேசிப்போம், கடவுள் விருப்பத்தை நிறைவேற்றுவோம். கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக.

– உங்கள் அண்ணன் **JP**

## பொதுவான செய்திகள் வெப்ப பக்கவாதம் (HEAT STROKE)

வெப்பத்தாக்கம் என்பது, உடலின் மைய வெப்பநிலை ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டும்போது ஏற்படும் உயிருக்கு ஆபத்தான ஒரு மருத்துவ அவசர நிலையாகும். இது மத்திய நரம்பு மண்டலத்தின் செயலிழப்பை ஏற்படுத்துகிறது. கடுமையான குழப்பம், சூடான/வறண்ட அல்லது வியர்த்த சருமம், வேகமான இதயத் துடிப்பு மற்றும் மயக்கம் ஆகியவை இதன் அறிகுறிகளாகும். இது உறுப்பு செயலிழப்பு அல்லது மரணத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், உடனடியாக உடலைக் குளிர்விப்பதும் அவசர மருத்துவ சேவைகளை அழைப்பதும் மிகவும் அவசியமாகும்.


**வெப்ப பக்கவாதத்தின் முக்கிய அம்சங்கள்: முக்கிய காரணங்கள்:** அதிக வெப்பநிலைக்கு நீண்ட நேரம் இருப்பது அல்லது வெப்பத்தில் தீவிரமான உடல் உழைப்பு ஈடுபடுவது, இவை உடலின் வெப்பநிலை சீராக்கும் திறனை மீறிச் செயல்பட வைக்கின்றன. அறிகுறிகள்: அதிக உடல் வெப்பநிலை (>104°F/40°C), சீரற்ற நடத்தை, கிளர்ச்சி, குழப்பம், சித்தப்பிரமை, வலிப்பு, தலைவலி, குமட்டல், தலைச்சுற்றல் மற்றும் இதயத்துடிப்பு அதிகரித்தல்.

**நிலைகள்/முன்னேற்றம்:** இது பெரும்பாலும் வெப்பச் சோர்வு (களைப்பு, அதிக வியர்வை, குமட்டல்) போன்ற லேசான வெப்பம் தொடர்பான நோய்களிலிருந்து, உடலின் குளிர்விக்கும் அமைப்பு செயலிழக்கும்போது ஏற்படும் வெப்பத் தாக்கமாக முன்னேறுகிறது. நீண்ட கால விளைவுகள் மற்றும் முன்கணிப்பு: உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டால், குணமடைவது சாத்தியமாகும், ஆனால் கடுமையான நிகழ்வுகளில் மூளை, இதயம், சிறுநீரகங்கள் மற்றும் தசைகளில் நிரந்தர சேதம் ஏற்படலாம். கல்லீரல் செயலிழப்பு, சிறுநீரக செயலிழப்பு மற்றும் பரவலான இரத்த உறைதல் (DIC) ஆகியவை இதன் சிக்கல்களில் அடங்கும்.

**உடனடி நடவடிக்கை:** அவசர மருத்துவ சேவைகளை அழைக்கவும், பாதிக்கப்பட்ட நபரை குளிர்ச்சியான சூழலுக்கு அழைத்துச் செல்லவும், அதிகப்படியான ஆடைகளை அகற்றவும், மேலும் உடல் வெப்பநிலையைக் குறைக்க பனிக்கட்டிகள், குளிர்ந்த நீர் தெளிப்பு அல்லது குளிர் குளியல் போன்ற முறைகளைப் பயன்படுத்தவும்.

**வெப்ப பக்கவாதத்தின் வகைகள்: கடுமையான உழைப்பினால் ஏற்படும் வெப்பத்தாக்கம்:** இது ஆரோக்கியமான நபர்களுக்கு (எ.கா., விளையாட்டு வீரர்கள், தொழிலாளர்கள்) வெப்பமான சூழல்களில் அதிக உடல் உழைப்பின்போது, பெரும்பாலும் வியர்வையுடன் ஏற்படுகிறது. உடல் உழைப்பற்ற (வழக்கமான) வெப்பத் தாக்குதல்: இது வெப்ப அலைகளின் போது ஏற்படுகிறது, பொதுவாக வயதானவர்கள் அல்லது நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதிக்கிறது, மேலும் பெரும்பாலும் வறண்ட சருமத்தால் வகைப்படுத்தப்படுகிறது. தடுப்பு நடவடிக்கைகளில், உடலை நீரேற்றத்துடன் வைத்திருத்தல், இலகுவான ஆடைகளை அணிதல் மற்றும் கடும் வெப்ப நேரங்களில் வெளிப்புறச் செயல்பாடுகளைத் தவிர்த்தல் ஆகியவை அடங்கும்.

# ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...



## மே - 2026

| காலை | லூக்கா | மாலை 1 இராஜாக்கள் |
|---|---|---|
| 1. | 21:20-38 | 10,11 |
| 2. | 22:1-20 | 12,13 |
| 3. | 22:21-46 | 14,15 |
| 4. | 22:47-71 | 16-18 |
| 5. | 23:1-25 | 19,20 |
| 6. | 23:26-56 | 21,22 |
| | | 2 இராஜாக்கள் |
| 7. | 24:1-35 | 1-3 |
| 8. | 24:36-53 | 4-6 |
| | யோவான் | |
| 9. | 1:1-28 | 7-9 |
| 10. | 1:29-51 | 10-12 |
| 11. | 2 | 13,14 |
| 12. | 3:1-18 | 15,16 |
| 13. | 3:19-36 | 17,18 |
| 14. | 4:1-30 | 19-21 |
| 15. | 4:31-54 | 22,23 |

| காலை | யோவான் | மாலை 2 இராஜாக்கள் |
|---|---|---|
| 16. | 5:1-21 | 24,25 |
| | | 1 நாளாகமம் |
| 17. | 5:25-47 | 1-3 |
| 18. | 6:1-21 | 4-6 |
| 19. | 6:22-44 | 7-9 |
| 20. | 6:45-71 | 10-12 |
| 21. | 7:1-27 | 13-15 |
| 22. | 7:28-53 | 16-18 |
| 23. | 8:1-27 | 19-21 |
| 24. | 8:28-59 | 22-24 |
| 25. | 9:1-23 | 25-27 |
| 26. | 9:24-41 | 28,29 |
| | | 2 நாளாகமம் |
| 27. | 10:1-23 | 1-3 |
| 28. | 10:24-42 | 4-6 |
| 29. | 11:1-29 | 7-9 |
| 30. | 11:30-57 | 10-12 |
| 31. | 12:1-26 | 13,14 |

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

**வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431**

அடுத்த இதழில்...

சிறுவர் பகுதி

## யோவாசின் ஆட்சி

(2இராஜாக்கள் 11,12 மற்றும் 2நாளாகமம் 22 முதல் 24 வரை)

கடவுளின் செல்லக்குட்டிகளா? நீங்கள் எல்லாரும் எப்படியிருக்கிறீர்கள்? நல்லாயிருக்கிறீர்களா? இப்பக் கூட நம்ம பைபிளில் குட்டி ராஜா யோவாஸ் அவர்களைக் குறித்து கற்றுக்கொள்ளலாமா?

ரோம்ப நாளைக்கு முன்னாடி, ஒரு நாட்டுல யோவாஸ் அப்படின்னு ஒரு குட்டிப் பையன் இருந்தார்.

அவருக்கு ஒரு வயசு இருக்கும்போதே, ஒரு கெட்ட ராணி அவரைப் பிடிக்க வந்தாங்க. ஆனால், யோவாஸோட அத்தை அவரை யாருக்கும் தெரியாம கர்த்தருடைய ஆலயத்திற்கு கூட்டிட்டுப்போய் அங்கே ஒளிச்சு வைச்சுட்டாங்க. (2இராஜா. 11:3)

**ரகசியமா வளர்ந்த ராஜா:**

அடுத்த ஆறு வருஷத்துக்கு யோவாஸ் அந்த ஆலயத்துக்குள்ளேயேதான் வளர்ந்தார். அங்க இருந்த பெரியவர்களில் ஒருத்தர், அவருக்கு எப்படி நல்லப் பிள்ளையாக இருக்கணும், மத்தவங்களுக்கு எப்படி உதவி செய்யணும்னு சொல்லிக் கொடுத்தாரு.

**ஏழு வயசுல ராஜா!** (2இராஜா. 11:21)

யோவாசுக்கு ஏழு வயசு ஆனபோது அந்த ஊர் மக்கள் எல்லாரும் சேர்ந்து யோவாஸை ராஜாவா மாத்துனாங்க.

ராஜா ஆனதும் யோவாஸ் ரொம்ப சூப்பரா ஆட்சி செஞ்சாரு. பழைய ஆலயத்தை எல்லாம் புதுப்பிச்சு,



அழகா மாத்துனாரு. மக்கள் எல்லாரும் யோவாசு ராஜாவைப் பார்த்து ஆச்சரியப்பட்டாங்க.

**என்ன ஆச்சு?**

ஆனா, யோவாஸ் வளந்த பிறகு ஒரு தப்பு பண்ணிட்டாரு. அவருக்கு (ராஜாவுக்கு) நல்ல பழக்கங்களைச் சொல்லிக் கொடுத்த பெரியவர் இறந்துட்டாங்க. அதுக்கப்புறம் யோவாஸ் ராஜா, கெட்ட நண்பர்களோட சேர ஆரம்பிச்சாரு. அந்த நண்பர்கள் சொன்ன பேச்சைக் கேட்டுக்கிட்டு, அவர் நல்ல வழியை விட்டுட்டு தப்பான பாதைக்கு போயிட்டார். இதனால யோவாஸ் ராஜாவோட வாழ்க்கை கஷ்டத்துல முடிஞ்சுது.

**நாம் கற்றுக்கொள்ள வேண்டிய 3 குட்டி பாடம்:**

**1. யார் கூட சேரணும்?**

யோவாஸ் நல்லவங்க கூட இருந்தவரைக்கும் நல்ல ராஜாவா இருந்தார், ஆனா, தப்பான நண்பர்கள் கூட சேர்ந்த உடனே கெட்டுப் போய்ட்டார்.

**2. பெரியவர்கள் சொல்வதை கேட்கணும்:**

அப்பா, அம்மா, பெரியவங்க நமக்குச் சொல்லிக் கொடுக்கிற நல்ல காரியங்களை நாம என்னைக்குமே மறக்கக் கூடாது எப்பவுமே கேட்கணும்!

**3. நல்ல ஆரம்பம், நல்ல முடிவு:**

ஒரு வேலையை நல்லபடியா ஆரம்பிக்கிறது மட்டும் போதாது, கடைசிவரைக்கும் முடிக்கணும். சபைக்கு கூடுகைக்குப் போவது, பைபிள் படிப்பது, அம்மா அப்பாவுக்கு, ஆசிரியர்களுக்கு, ஊழியக்காரர்களுக்கு, கீழ்ப்படிவது, பிறருக்கு உதவுவது இது நல்ல காரியம் இதை கடைசிவரை செய்யணும். செய்வீர்களா?

கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 2:7**

"அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்து வைத்திருக்கிறார்; உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார்."

— சகோ. அன்பு ஏசுதாஸ்

# ஊசாயின் எச்சரிக்கை

**கர்த்தரின் தயவு – தாவீதை காப்பாற்றியது !!!**

கர்த்தருக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா!!! அனைவரும் நலமாக இருக்கின்றீர்களா? உங்கள் யாவருக்கும் கர்த்தருடைய நாமத்தினால் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!!!. பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக!

கடந்த மாதத்திலே பூமியில் வாழ்ந்த ராஜாக்களிலேயே மிகப்பெரிய ராஜ்ஜியத்தை ஆட்சி செய்த தாவீது ராஜாவின் மகன் அப்சலோம் செய்த சதித்திட்டத்தைக் குறித்து படித்தோம். இந்த மாதம் தாவீதைக் காப்பாற்றிய ஊசாய் என்பவனுடைய எச்சரிக்கையைக் குறித்துப் படிக்கலாமா?. வாங்க படிக்கலாம்.

அப்சலோம் தன்னுடைய தகப்பனாகிய தவீதை எப்படியாவது கொன்றுவிட வேண்டும் என்று அநேக முயற்சிகளை செய்துகொண்டு இருந்தான். தாவீதின் படையினர் மீதும் மிகப்பெரிய போர் தொடுக்க முயற்சி செய்தான். அதற்காக தன்னுடைய படையினரிடம் ஆலோசனைகளை கேட்டு அதைக்குறித்து மனதிலே சிந்தனை கொண்டிருந்தான். அப்பொழுது அப்சலோமின் படையில் முக்கியமான பதவியில் இருந்த அகித்தோப்பேல் என்பவன் குறிப்பிடத்தக்க ஒரு ஆலோசனையை வழங்கினான், அதாவது அகித்தோப்பேல் அப்சலோமை நோக்கி: நான் பன்னிரெண்டு ஆயிரம்பேரை என்னுடைய படையிலே சேர்த்துக்கொண்டு இன்று இரவிலே தாவீதை தேடிச் செல்கின்றோம்.

தாவீதும் அவரது படையினரும் கொஞ்சமும் எதிர்பாராத நேரத்தில் நாங்கள் அனைவரும் அவர்களைச் சூழ்ந்துகொண்டு. அவர்களை திடுக்கிடச் செய்வோம். அப்பொழுது அவருடன் இருக்கும் மக்கள் அனைவரும் பயத்தினாலே ஓடிவிடுவார்கள். அப்படி நடந்தால், நான் ராஜாவாகிய தாவீதை மாத்திரம் வெட்டி, மக்களை எல்லாம் உம்முடைய வசமாக திருப்புவேன் என்று ஆலோசனை வழங்கினான்.

இந்த ஆலோசனை அப்சலோமிற்கு மிகவும் நல்ல ஆலோசனையாக தோன்றியது. இஸ்ரயேலருடைய மூப்பர்களுக்கும் நல்லதாக தோன்றியது. ஆனாலும் அப்சலோம், ஊசாய் என்பவனை அழைத்து அவனிடமும் இந்த ஆலோசனையைக் குறித்து கருத்துக் கேட்டான். அகித்தோப்பேல் இந்தமுறை சொன்ன ஆலோசனை நல்ல ஆலோசனை அல்ல என்று ஊசாய் சொன்னான். மேலும் ஊசாய் அப்சலோமை நோக்கி: உம்முடைய தகப்பனும் அவருடைய படையினரும் மிகவும் பலசாலிகள் என்றும். குட்டிகளை பலிகொடுத்த கரடியைப் போல உக்கிரத்தோடு இருப்பார்கள் என்றும் உங்களுக்கு தெரியும். உங்களுடைய தகப்பனாகிய தாவீது யுத்த வீரன் (போர் வீரன்) என்பதும் உங்களுக்கு தெரியும். அவர் இரவு

நேரங்களில் நாம் நினைத்ததைப்போல மக்களுடன் தங்கமாட்டார். அவர் ஏதவாது ஒரு குகையிலே தங்கியிருப்பார், அப்படி அவர் தங்கியிருக்கையில் நாம் அவருடைய கண்களில் சிக்கினோம் என்றால் நம்முடைய படையினரை அவர்கள் முழுவதுமாக கொன்று விடுவார்கள். அதினால் இந்த ஆலோசனை நல்லதல்ல என்று சொன்னான்.



அப்பொழுது அப்சலோமும், இஸ்ரயேல் மனிதர்கள் அனைவருக்கும் ஊசாயின் ஆலோசனை மிகவும் நல்லது என்று கண்டார்கள். இப்படிக் கர்த்தர் அப்சலோமின்மேல் தண்டனையை வரப்பண்ணும்படி, அகித்தோப்பேலின் நல்ல ஆலோசனையை, ஒன்றுக்கும் உதவாத ஆலோசனையாக மாற்றுவதற்கு கர்த்தர் கட்டளையிட்டார். பின்பு ஊசாய் அப்சலோம் செய்த திட்டங்கள் யாவற்றையும் தாவீதுவிடம் அறிவிக்கும்படி தகவல் அனுப்பினான். இப்படியாக ஊசாய் என்பவருடைய எச்சரிக்கை தாவீதைக் காப்பாற்றியது. ஆனாலும் கர்த்தர்தான் தாவீதிற்கு உதவி செய்தார்.

கர்த்தருக்குப் பிரியமான செல்லப் பிள்ளைகளா!!! கர்த்தர் தம்மை விசுவாசிக்கிற யாவரையும் எல்லா சூழ்நிலைகளிலும் பாதுகாப்பாக வழி நடத்துகிறார். ஒருவேளை அகித்தோப்பேலின் ஆலோசனையின்படி போர் நடந்திருந்தால், தாவீதுவின் சூழ்நிலை மோசமாக மாறியிருக்கலாம் ஆனாலும், கர்த்தர் ஊசாய் என்ற மனிதனின் மூலமாக அந்தத் திட்டத்தை செயல்படாமல் செய்து, தாவீது ராஜாவை வெற்றிபெற செய்தார்.

நாம் தாவீது ராஜாவைப்போல அனைத்துச் சூழ்நிலைகளிலும் வெற்றிபெற விரும்பினால், ஒன்றை மட்டும் நம்முடைய நினைவில் வைப்போம். அதாவது, கர்த்தரையே நம்முடைய துணையாக கொண்டிருத்தல் வேண்டும். எந்த ஒரு பிரச்சினை என்றாலும் கர்த்தரை நோக்கி ஜெபம் செய்யுங்கள். அவர் நமக்கு பாதுகாப்பு தருவார்.

**மனப்பாட வசனம்: சங்கீதம் 3:4**

"நான் கர்த்தரை நோக்கி சத்தமிட்டுக் கூப்பிட்டேன். அவர் தமது பரிசுத்த பர்வதத்திலிருந்து எனக்குச் செவிகொடுத்தார்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்


# சுயம்பாகியும், பானபாத்திரக்காரனும்

கர்த்தருடைய செல்லப் பிள்ளைகளே! நன்றாக உள்ளீர்களா? இந்த மாதம் நீங்கள் எல்லோரும் நன்றாக படித்து நன்றாக தேர்வு எழுதும் படி நான் உங்களை கர்த்தருடைய நாமத்தில் வாழ்த்துகிறேன். இந்த மாதம் மீண்டும் ஒரு புதிய பாடத்தை கற்றுக் கொள்வோம்.

ஆதியாகமம் 40 ஆம் அதிகாரம்: எகிப்து தேசத்திலே பார்வோன் என்பவன் அரசனாக வாழ்ந்து வந்தான். அவருக்கு சிறந்த முறையில் உணவு பதார்த்தங்களை செய்யும்படியாக சுயம்பாகி அதாவது, சமையற்காரர் ஒருவன் இருந்தான். அதேபோல அரசனுக்கு பந்தி விசாரிக்க கூடிய ஒருவனும் இருந்தான்.ஒருநாள் இவர்கள் இருவரும் அரசனுக்கு விரோதமாக குற்றம் செய்தார்கள் என்று, இவர்களை சிறையில் அடைத்தார்கள்.

ஒரு நாள் சமையல்காரனும், பந்தி விசாரிப்புகாரனும் இரவில் தூங்கும் பொழுது வெவ்வேறு விதமான கனவுகளை கண்டார்கள். பந்தி விசாரிப்புக்காரன் கண்ட கனவு என்னவென்றால், 'ஒரு திராட்சை செடி அதில் மூன்று கொடிகள் இருந்தது. அந்த கொடிகளில் திராட்சைப் பழங்கள் கொத்து கொத்தாக இருந்தது.' அந்த பழத்தை பறித்து பிழிந்து அரசனுக்கு கொடுத்தான் என்பதாக கனவு கண்டான். அதன் அர்த்தம், மூன்று கொடி, மூன்று நாளாம். அதிலுள்ள பழங்களைப் பறித்து பிழிந்து அரசனுக்கு கொடுத்தது என்பது, மீண்டும் அரசன் அவனை உயர்த்தி மீண்டும் அதே வேலையை கொடுப்பதாக அர்த்தமாகும்.

சமையல்காரனின் கனவு என்னவென்றால், மூன்று வெள்ளை கூடைகள் என் தலையின் மேல் இருக்க கண்டேன். மேற்கூடையிலே பார்வோனுக்காக சமைக்கப்பட்ட சகலவித பலகாரங்கள் இருந்தது. பறவைகள் வந்து கூடையில் உள்ளவைகளை சாப்பிட்டு விட்டு சென்றது என்றான்.அதன் அர்த்தம், மூன்று கூடைகள் என்பது மூன்று நாளாம். கூடையில் உள்ளவைகளை பறவைகள் சாப்பிட்டு விட்டது என்பது, பார்வோன் அரசன் இவன் தலையை உயர்த்தி மரத்திலே தூக்கிப் போடுவான் என்பதனை அர்த்தப்படுத்தியது.



மூன்று நாளைக்குப் பின்பு பார்வோன் அரசனுக்கு பிறந்தநாள் வந்தது. அந்த நாளிலே பந்தி விசாரிப்பு காரனும் சமையல்காரனும் கண்ட கனவுகளின் படி நடந்தேறியது. அதாவது, பந்தி விசாரிப்புகாரனை ராஜா உயர்த்தி மீண்டும் அந்த வேலையை கொடுத்து எல்லாருக்கும் முன்பாக அவனை, தலைமை அதிகாரியாக உயர்த்தினான்.

ஆனால் சமையற்காரனையோ அரசன் எல்லாருக்கும் முன்பாக மரத்திலே தூக்கி போட்டான். அவன் மரித்துப்போனான்.

ஆம் பிள்ளைகளே இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளப் போகும் பாடம் என்ன என்பதை கவனிப்போம்.

பந்தி விசாரிப்புக்காரன் தன் அரசனுக்கு முன்பாக உண்மையும், நேர்மையுமாக நடந்து கொண்டான். ஆனாலும் சிறையில் வைக்கப்பட்டான். ஒரு நாள் அவனுடைய உண்மையும் நேர்மையுமான வாழ்க்கை தண்டனையிலிருந்து காப்பாற்றி அவனுக்கு உயர்ந்த பதவியை கொடுத்தது.

ஆனால் சமையற்காரனின் வாழ்க்கையில் உண்மையும், நேர்மையும் இல்லாதபடியினாலே, அவன் தண்டிக்கப்பட்டு மரத்திலே தூக்கி போடப்பட்டான். அவன் மரித்துப் போனான்.

கர்த்தருக்கு பிரியமான என் அன்பு செல்லங்களே! கர்த்தருக்கு முன்பாக நாம் உண்மையும் நேர்மையுமாக நடந்து கொள்ளும்போது, கர்த்தர் நம்மை உயர்த்துவார். கர்த்தரிடம் மாத்திரம் அல்ல உங்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்ற எல்லா மக்களிடமும் நாம் கண்ணியமாக, உண்மையாக நடக்கும் பொழுது, பரலோகத்தின் சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மை உயர்த்தக் கூடியவராக இருக்கிறார். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

**மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 3:26**

"கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்."

— சகோ. பீட்டர்

## எலிசா தேர்ந்தெடுக்கப்படுதல்

**1 இராஜாக்கள் 19:19–21**

ஹாய் குட்டீஸ்! எப்படியிருக்கிறீர்கள்? கர்த்தரின் கிருபையினால் நீங்கள் சிறப்பாக முழுஆண்டு தேர்வு எழுதி, விடுமுறை நாட்களை கர்த்தருக்கென்று மகிழ்ச்சியாக பயன்படுத்துவீர்கள் என்று கர்த்தருக்குள் நம்புகிறேன். பிள்ளைகளா! இந்த மாதம் எலிசா தீர்க்கதரிசி தேவனால் தெரிந்தெடுக்கப்படுகிற நிகழ்வைப் பற்றி படிக்க இருக்கிறோம்.

கடவுள் எலியாவிடம் பேசி, அவருக்குப் பின் தீர்க்கதரிசியாக இருக்கும்படி சாப்பாத்தின் குமாரனாகிய எலிசாவை தேர்வுசெய்யக் கூறினார்.

அவ்வாறே எலியா எலிசாவைத் தேடிச் சென்றபோது, அவர் தனது வயலில் ஏர் உழுதுகொண்டிருந்தார். அவர் 12 ஏர் மாடுகளை வைத்து தனது நிலத்தில் உழுது கொண்டிருந்தார். இது எலிசா ஒரு செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதையும், கடின உழைப்பாளி என்பதையும் காட்டுகிறதல்லவா? குட்டீஸ்!

அப்பொழுது எலியா கர்த்தர் சொன்னபடி எலிசாவைக் சந்தித்தபோது, தன்னிடம் இருந்த தீர்க்கதரிசன சால்வையை எலிசாவின் மேல் போட்டார். அந்நாட்களிலே ஒருவரின் மேல் சால்வையைப் போடுவது என்பது, அந்த நபருக்குத் தனது அதிகாரம், பொறுப்பு மற்றும் ஆவிக்குரிய பாரம்பரியத்தை வழங்க ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கும் ஒரு அடையாளமாக இருந்தது.

சால்வை தன் மேல் விழுந்தவுடன், எலிசா கர்த்தரின் அழைப்பைப் புரிந்துகொண்டார். அந்த உன்னதமான வேலையை செய்ய மகிழ்வுடன் தன்னை அர்ப்பணித்தார். பின்பு எலிசா தனது வீட்டிற்குச் சென்று, தான் உழுத ஒரு ஜோடி மாடுகளை அடித்து, ஏர்க்கருவிகளையே விறகாகக் கொண்டு அந்த இறைச்சியை சமைத்துத் தன் மக்களுக்குக் கொடுத்தார்.

இது அவர் மீண்டும் தன் பழைய தொழிலுக்குத் திரும்பப் போவதில்லை என்பதனையும், தனது பழைய வாழ்க்கையை அவர் விரும்பவில்லை என்பதையும் அவரது உற்சாகமான இந்த செயல் காட்டுகிறதல்லவா? பிள்ளைகளா!

இதற்குப் பிறகு அவர் எலியாவைப் பின்தொடர்ந்து சென்று அவருக்குப் பணிவிடை செய்யத் தொடங்கினார்.

எலிசா தெரிந்தெடுக்கப்படுமுன் அவர் ஒரு பெரிய செல்வந்தராக இருந்தும், எலியாவிற்குப் பணிவிடை செய்யும் சீடராகத் தன்னை மாற்றிக்கொண்டது மட்டுமல்லாமல், எலியா பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு, எலிசா அவரிடம் எலியாவின் ஆவியில் இரட்டிப்பான பங்கு தனக்கு வேண்டும் என்று கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

அவ்வாறே, கர்த்தரையும் அவரின் தீர்க்கதரிசியாகிய எலியாவை உறுதியாக பிடித்துக்கொண்டபடியால், எலியாவை விட எலிசா அதிக எண்ணிக்கையிலான அற்புதங்களையும், மக்களுக்கு அதிக நன்மைகளையும், கர்த்தரின் விருப்பத்தை அவர்களுக்கு தெரிவிக்கிறவராக இருந்ததை வேதாகமத்தில் படிக்கலாம்.

பிள்ளைகளா! எலிசாவைப்போல நீங்கள் கர்த்தருக்கு பிரியமானவர்கள், உங்களை அவருக்காக சொந்தமாக ஏற்றுக்கொண்டு அதிகமாக நேசிக்கிறார். நீங்கள் அவருக்கு வேண்டும் என்றும், ஆண்டவரின் அன்பிலே (வேதவசனத்தினால்) அதிகமாக வளர வேண்டும் என்று கர்த்தர் உங்களிடம் எதிர்பார்க்கிறார். நீங்கள் அதை உணர்ந்து கடவுள் தரும் அநேக ஆசீர்வாத நன்மைகளை பெற்றுக்கொள்வீர்களாக! அடுத்த இதழில் சந்திப்போமா?

**மனப்பாட வசனம்: சங்கீதம் 4:3**

"பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்துகொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்."

— சகோ. ஜான் செல்லையா

## ஏப்ரல் மாத கேள்விகள்
(லூக்கா சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)



1. இயேசுவுக்கு எத்தனை வயதாகும் போது எருசலேமுக்குப் போனார்கள்?
2. திபேரியுராயனின் 15 ஆம் வருஷத்தில் யூதேயாவின் தேசாதிபதி யார்?
3. வனாந்தரத்தில் கூப்பிடுகிற சத்தத்தை பற்றி எழுதியிருப்பவர் யார்?
4. இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது அவர் வயது என்ன?
5. இயேசு யாராலே வனாந்தரத்துக்கு கொண்டு போகப்பட்டார்?
6. எலியாவின் நாட்களில் எவ்வளவு நாள் வானம் அடைபட்டது?
7. இயேசு கட்டளையிட்டவுடன் நீங்கியது எது?
8. 'நான் பாவியான மனுஷன்' என்று கூறியவன் யார்?
9. இயேசுவைக் கிறிஸ்து என்று அறிந்திருந்தவை எவை?
10. இயேசுவின் பாதத்தில் விழுந்த ஜெப ஆலயத் தலைவன் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-05-2026**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

### சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. லூக்கா 1:1-3 | 6. லூக்கா 1:50 |
| 2. லூக்கா 1:5 | 7. லூக்கா 1:66 |
| 3. லூக்கா 1:5,6 | 8. லூக்கா 2:2 |
| 4. லூக்கா 1:13-15 | 9. லூக்கா 2:5 |
| 5. லூக்கா 1:27,28 | 10. லூக்கா 2:25 |

### சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்





1) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
2) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
3) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
4) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
5) Mrs.P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
6) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
7) A. ரோஸ்மேரி - சென்னை
8) J. ஜான்சி - ஆனைமலை
9) S. ஜெபமணி - தென்காசி
10) T. பால்வின் -கன்னியாகுமரி
11) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
12) S. ஷீபா ஞானவின்சா - டோனாவூர்
13) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
14) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
15) Mrs. ராணி குமரன் - கரூர்
16) Mr. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
17) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
18) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
19) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட்- தூத்துக்குடி
20) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
21) A. லலிதா - புதுக்கோட்டை
22) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
23) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
24) Mrs. பிளாரன்ஸ் முத்தையா - மதுரை
25) N.ஞானசுந்தரி நாகராஜன்- பாளையங்கோட்டை
26) J. கிறிஸ்டோபர் தாஸ் - நாகர்கோயில்
27) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் -நெல்லை
28) R. ஞானசிரோன்மணி - மதுரை
29) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
30) N.V. அஜிதா சுபின் - மார்த்தாண்டம்
31) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
32) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
33) Dr. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
34) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
35) R. சரோஜா - தென்கலம்
36) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
37) A. அரவிந்த் - மதுரை
38) P.S. ருக்மணி - ஈரோடு
39) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
40) A. அனிதா ஸ்டாலின் - தரங்கை
41) S. கார்த்திக் - கரூர்
42) Mrs. J. பூங்கொடி ரவி - முத்தூர்
43) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
44) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
45) M. அன்பழகன் - தங்கமேடு
46) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
47) Mrs. M. ஈஸ்வரி முருகன் - கரூர்
48) M. ராஜா - கரூர்
49) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
50) S.G. சேகர் - ராணிபேட்டை
51) Mrs. சுகுணா தமலின் - தூத்துக்குடி
52) S. டேவிட் சாந்தகுமார் - செங்கோட்டை
53) Mrs. சூரிய பிரியா - மதுரை
54) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
55) S. பாக்கியராஜம் - மதுரை
56) Mr. டேவிட் ராஜ் - அனவரதநல்லூர்
57) N. ஜான் செல்லையா - மதுரை
58) Mrs. J. ஜெயராணி ஜான் - மதுரை

**தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !**

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 📖 94421 23819**
**Registered News Paper No. : TNTAM/2011/42166**
**Postal Registration No. : TN/MA/67/2024 - 2026**
**Date of Publication : 9th April 2026**
**Posted at Arasaradi HPO on 10th & 11th April 2026**




## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்











அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!

## தபால் வழி பைபிள் பாடங்கள்







## கைபிரதிகள்








உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

**EDITOR**
**KIRUBAIYULLA VAARTHAI**
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers